***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT***
***Mannargudi***
***CC.No.252/2025 – P.W. 3 (Addl .W )***

| | |
|---|---|
| *Name* | திரு. உதயகுமார் (காவல் உதவி ஆய்வாளர்) |
| *Father/Husband's Name* | கோவிந்தராஜ் |
| *Village* | வடபாதிமங்கலம் காவல் நிலையம் |
| *Taluk* | |
| *Age* | *52* |

**எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 17.04.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் வடபாதிமங்கலம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. வெங்கடசுப்ரமணியன் மற்றும் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளர் திரு.இளங்கோவன் ஆகியோர்கள் தற்போது தேர்தல் அலுவலாக வேறு காவல் நிலையத்திற்கு பணி மாற்றம் செய்துள்ளதாலும், மேற்படி நபர்களின் கையெழுத்து மற்றும் கையொப்பம் நன்கு தெரியும் என்பதாலும் கால தாமத்தினை தவிர்க்கும்பொருட்டு நீதியின் நலன் கருதி இவ்வழக்கின் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 07.01.2025-ம் தேதியன்று வடபாதிமங்கலம் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. வெங்கடசுப்ரமணியன் என்பவர் நிலைய பொறுப்பிலிருந்தபோது திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த சண்முகம் மகன் சிவா என்பவரை விசாரித்து புகார்வாக்குமூலம் பதிவு செய்து பின் நிலையம் வந்து காவல் நிலைய குற்ற எண்.3/2025 ல் BNS சட்டப் பிரிவுகள் 296(பி), 118(1),351(3) -ன் கீழ் எதிரிகளின் மீது வழக்கு பதிவு செய்துள்ளார். (**புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.3 ஆகவும், அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையின் அச்சு படிவம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

பின்னர் இவ்வழக்கு கோப்பினை உதவி ஆய்வாளர் திரு.இளங்கோவன் அவர்கள் பார்வைக்கு வைத்துள்ளார்.

3. பின்னர் மேற்படி உதவி ஆய்வாளர் திரு.இளங்கோவன் இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 12.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் கேசவன் மற்றும் செல்வா ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். (**பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 மற்றும் 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு

4. சம்பவம் உண்மை என தெரிய வரவே எதிரிகளை தேடிவந்த நிலையில் எதிரிகள் மூலங்குடி பேருந்து நிறுத்தம் அருகே நின்றுக் கொண்டிருந்தவரை அன்றைதினமே 17.00 மணியளவில் குற்ற காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற அடைப்பு காவலுக்கு உட்படுத்தியுள்ளார். மேலும் இவ்வழக்கில் காயம் அடைந்த சிவாவிற்கு விபத்து பதிவேடு பதிவு செய்தும், முதலுதவி சிகிச்சை அளித்து உள்நோயாளியாக அனுமதித்த திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவர் திரு. அருண்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேட்டினை பெற்று தாக்கல் செய்துள்ளார். (**விபத்து பதிவேடு அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). மேலும், காயம்பட்ட சிவா என்பவருக்கு சிகிச்சையளித்த திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவர் திரு. சக்திபாலன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மருத்துவ சட்டக்கருத்துரை பெற்று தாக்கல் செய்துள்ளார். **(மருத்துவ சட்டக்கருத்துரை அ.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** மேற்படி மருத்துவரின் மருத்துவ சட்டக்கருத்துரையில் காயம்பட்ட நபர் தன்னிச்சையாக மருத்துவ மனையிலிருந்து சென்றுவிட்டப்படியால் காயத்தின் தன்மை குறித்து கருத்துரை வழங்க இயலாது என சான்று வழங்கியுள்ளார். மேலும், இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் வெங்கடசுப்ரமணியன் என்பவரை விசாரித்துவாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5. இத்துடன் அவரது விசாரணையை முடித்து எதிரிகளின் செய்கையானது BNS சட்டப்பிரிவுகள் 296(பி), 118(1),351(3)-ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் என கடந்த 29.02.2025-ம் தேதியன்று குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவ இடத்திற்கு செல்லாமலும் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமலும் காவல் நிலையத்திலே வைத்து வழக்கு ஆவணங்களை தயார் செய்து எதிரிகளுக்கு எதிராக கொடுக்கப்பட்ட ஒரு பொய்யான புகாரினை சரிவர விசாரணை செய்யாமல், குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

(ஒம்/-) ஆ.சீதாலெட்சுமி 17.04.2026

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.